**செய்தி வெளியீடு எண். 423** **நாள். 28.7.09**

## <u>செய்தி வெளியீடு – 28.7.2009</u>

போலி குடும்ப அட்டைகளை கண்டுபிடித்து களைவதற்காக குடும்ப அட்டைகளை 100 விழுக்காடு வீடு வீடாக சென்று தணிக்கை செய்யும் பணி சென்னை மற்றும் புறநகர் பகுதிகளிலும் மதுரை, சிவகங்கை, நீலகிரி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலும் 1.9.2009 முதல் மேற்கொள்ளப்படவுள்ளதால் நியாயவிலை கடைகளில் தாங்கள் தற்போது வசிக்கிற முகவரியை பதிவு செய்யுமாறு குடும்ப அட்டைதாரர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அது சம்பந்தமாக கீழ் கண்ட செய்தி அட்டைதாரர்களது தகவலுக்காக வெளியிடப்படுகிறது.

அ) குடும்ப அட்டையில் உள்ள முகவரி சரியாக அச்சிடப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்கள் நியாயவிலை கடையில் பராமரிக்கப்படும் பதிவேட்டில் விலாசம் குறித்து பதிவுகள் செய்ய தேவையில்லை. அவர்கள் பொருட்களை வாங்க கடைக்கு வரும் போது அதே முகவரியில் வசிப்பதாக தெரிவித்தால் போதுமானது.

ஆ) ஒரு கடைக்கு உட்பட்ட பகுதியில், வேறு தெருவிற்கு வீட்டினை மாற்றி சென்றிருந்தால் அவர்கள் தங்களுடைய புதிய முகவரியினை கடையில் உள்ள பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். மேலும் அப்புதிய முகவரியை சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் / வட்ட வழங்கல் அலுவலகம் மூலம் குடும்ப அட்டையிலும் பதிவு செய்து கொள்வது நலம்,

இ) எப்பொருளும் வேண்டாத குடும்ப அட்டைதாரர்கள் ( “ N “ குடும்ப அட்டைகள் ) நியாயவிலை கடைக்கு சென்று முகவரி பதிவு செய்ய வேண்டியதில்லை.

ஈ) நியாயவிலை கடை பணி நாட்களில் பொருள் வாங்க வரும்போதோ அல்லது எப்பொழுது வேண்டுமானாலும் புதிய முகவரியை பதிவு செய்யலாம்.

உ) குடும்ப தலைவரே நியாயவிலை கடைக்கு வந்து முகவரியை பதிவு செய்ய வேண்டியதில்லை. குடும்ப அட்டையில் இடம் பெற்றுள்ள உறுப்பினர் எவரேனும் ஒருவர் நியாயவிலை கடைக்கு பொருள் வாங்கும் போது வந்து பதிவு செய்யலாம்.

ஊ) முதியோர்களாக இருப்பின்புதிய முகவரியை கடிதம் மூலம் நியாய விலை கடைகளுக்கு பதிவு செய்ய அட்டையுடன் உதவியாளர் மூலம் அனுப்பலாம்.

பெரும்பாலான குடும்ப அட்டைதாரர்களிடமிருந்து முகவரியை பதிவுசெய்ய மேலும் கால அவகாசம் கோரி முறையீடு பெறப்பட்டது, இதனைத்தொடர்ந்து சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், மதுரை, சிவங்கைகை ஆகிய மாவட்டங்களில் நியாயவிலை கடைகளில் முகவரியை பதிவுசெய்வதற்கான காலஅவகாசம் 15.08.2009 வரை நீட்டிக்கப்படுகிறது, இந்த வாய்ப்பினை பொது மக்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதில் ஏதேனும் சிரமங்கள் இருப்பின் சென்னையை பொருத்தவரையில் துணைஆணையாளர்(வடக்கு) (தொலைபேசி எண் 28551028 அல்லது துணை ஆணையாளர்(தெற்கு) (தொலைபேசி எண் 28551026 ) அல்லது சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளருக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கலாம்.

* * *

**வெளியீடு** :   இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9